உ

பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

104

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை தருதலம், மாம்பாக்கம்; விசய, புரட்டாசி; 18—9—53 தளிர்-51

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

இருமைக்கும் நலம்

இருமை என்பதில் பலர்க்கும் ஐயம் உண்டாவதுண்டு. இப் பிறப்பு மறு பிறப்பு என்பது அதன் பொருளா? இக உலகம் மறு உலகம் என்பதை அது குறிக்குமா? பொருள் அருள் என்பது அதன் கருத்தா? அல்லது நன்மை தீமை என்னும் இரண்டையுந் தான் அது உணர்த்துகின்றதா?

எல்லாவற்றையும் உள்ளடக்கி ஒரே வகையாகத் தீர்வு செய்து கூறினால், இருமை என்பதை, இப்போது பிறந்திருக்கும் பிறவி நிலை என்றும் அதன் மறு நிலை என்றும் பகுத்துரைக்கலாம்.

மறு நிலை, மறு பிறவி நிலையாகவும் இருக்கலாம், பிறவியற்ற பெரு நிலையாகவும் இருக்கலாம்; இப் பருவுடம்பற்ற நுண்ணுடம்பு நிலையிலேயும் இருக்கலாம்; அது நன்மை நிலையாகவும் அமையலாம், தீமை நிலையாகவும் இருக்கலாம்; மீண்டும் இவ்வுலகத்திலேயும் பொருந்தலாம், மறுவுலகத்திலேயும் வாய்க்கலாம். பிறந்த நிலை இம்மை என்றும் அதன் மறு நிலை மறுமை என்றுங் கூறுதல் மொத்தத்தில் எவ்வகையிலும் இழுக்காது.

பிறந்திருக்கும் இந்த நிலைக்கு மறு நிலை என எத்தன்மையிலாவது ஒருவகை இருக்கத்தானே வேண்டும்; ஆதலின் மறுமை பற்றிப் பேசுதல் ஆழ்ந்து நோக்குவோர் கடமையேயாம். மறுமையை ஐயுறுவதற்குப் பதிலாக, பிறந்த பிறவியின் நிலைமைகளைக் கொண்டு மறுமையை வளப்படுத்தி நலப்படுத்திக் கொள்ள முயலுதலே அழகிய நாகரிக முடையார் செய்கையாகும்.

தெய்வத் திருவள்ளுவர் அதற்கு மிக எளிதான இனிதான வழியொன்று காட்டுகின்றார். எங்கும் என்றும் எல்லா நிலையிலும் எல்லாராலும் இயலக் கூடியது அது! அதுதான். தீமை இலாத இன் சொல்! 'யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை' என்று வேறு பெரியாரும் கூறினார்.

வாழ்க்கையில் துன்பம் தீர்க்கும் முதற் கருவி இன்சொல் அப்புறந்தான் மற்றவை! சிறுமையுள் நீங்கிய இச்சொல் இருமையும் பெருமையுள் வைக்கும் என்பதில் என்ன ஐயமிருக்கின்றது!

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல்— துன்பந் தருவதிலிருந்து நீங்கிய இனிய சொல், மறுமையும் இம்மையும் இன்பம் தரும்— மறுமை இம்மை என்னும்— இருமையிலும் எல்லார்க்கும் இன்பம் தருவதாகும்.

சிறுமை என்றது இங்கே துன்பம்; இன்சொல் இயல்பாகவே சிறுமையின் நீங்கியது என்றற்கு இவ்வாறு கூறினார். கருத்தாலும் பண்பாலும் முறையாலும் பிறர்க்கு நோய் செய்யாததாக இருக்கும் இன்சொல்லே வழங்கிவர வேண்டும் என்பது இதன் நோக்கம்!

இம்மை வாழ்வு மறுமை நலன்களின் நோககுடையதாய் இருக்கவேண்டும் என்னும் அதன் முதன்மை பற்றி மறுமை முற் கூறினார். இம்மையில் ஒருவர் நல் வாழ்வு வாழ்ந்தார் என்றால், மறுமை நலங்கட்குக் குறைவில்லாத நேர்மையிலும் இனிமையிலும் வாழ்ந்தார் என்பதே பொருளாவதன்றி, இம்மைப் பேறுகளை நிரம்பப் பெற்று வாழ்ந்தார் என்பதன்று பொருள்!

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

இலை	விசய, புரட்டாசி,	தளிர்
5	18-9-53 வெள்ளி	51

நிலக்கொடை வேள்வி

உணவுப் பற்றுக் குறையும் வேலையின்மையும் உள்ள நாடுகளில் நிலச் சீர்திருத்தம் இன்றியமையாதது. சீனம் வன் செயல்களையும் கையாண்டு இச் சீர்திருத்தத்தைச் செய்து முடித்தது. ஈஜிப்து சட்டமியற்றி மிகச் சுருங்கிய காலத்திலேயே நிலமில்லா உழவர்களுக்கு நிலத்தைக் கொடுத்தது. நம் நாட்டில் 'ஜமீந்தாரி முறை ஒழிப்பை'த் தவிர வேறு எதும் இத் துறையில் ஆட்சியால் செய்யப்படவில்லை.

காந்தியடிகள் வழிவந்த சான்றோர் திரு. வினோபா பவே நிலக்கொடை வேள்வி என்னும் தம் ஒறுப்பிலா இயக்கத்தால் இப் பெரும் பணியை மேற்கொண்டுள்ளார். இவ்வியக்கமே கார் முகிலில் பளிச்சென்று மின்னல் தோன்றுவதைப்போல் தெலிங்கானா வன்செயல்களுக்கிடை திடீரென்று தோன்றிற்று. 1957-ம் ஆண்டுக்குள் 5 கோடி ஏக்கர் நிலத்தைக் கொடையாகப் பெற்று ஆளுக்கொரு ஏக்கராக 5 கோடி உழவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் இவ்வியக்கத்திற்குப் பெருகவியாய் இருக்கின்றார். இவர் தமிழ் நாட்டில் செய்த சுற்றுப் பயணத்தில் 5,218 ஏக்கர் நிலத்தைக் கொடையாகப் பெற்றிருக்கிறார். குறிக்கோளின்படி தமிழ் நாட்டில் திரட்டப்படவேண்டிய 30 நூறாயிரம் ஏக்கர் நிலத்திற்கு இதுவரை 16 ஆயிரம் ஏக்கர் நிலமே சேர்ந்துள்ளது. புலவர்களுக்கு அதாவது சான்றோர்களுக்கு ஊர் ஊராக வழங்கின வரலாறுடைய தமிழ் நாட்டிற்கு இத் தொகை மிகச் சிறிதேயாகும். எனினும், 'வரலாற்றுப்படி மீண்டும் நடைபெறும்' (History will repeat) என்று ஒருண்மை இருப்பதனால் இந் நாட்டில் நிலக்கொடை வேள்வி தோல்வியுறுவதற்கில்லை. தமிழறிந்த திரு பவே அவர்களின் வருகைக்கு இந் நாடு காத்திருக்கின்றது போலும்!

நிலக்கொடை வேள்வி தோல்வியுற்றால் உழவர் ஒத்துழையாமை இயக்கம் தொடங்குவரென்று திரு. நாராயண் அவர்கள் தெரிவித்திருக்கிறார். இதற்கோர் எடுத்துக்காட்டென்னும் படி சூரத் அருகே செப்டம்பர் 2-ம் நாள் ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது. அங்கு ஜமீந்தார்களின் நில எல்லைக்குள் ஒரு பெருங் கூட்டம் புகுந்து உழுதிருக்கிறது. அன்று 1045, 'சத்தியாக்கிரகி'கள் சிறைப்படுத்தப் பட்டனர். (அன்றிரவே 942 பேர் விடுதலை செய்யப்பட்டனர்). அந்த வட்டத்திலுள்ள 5000 ஏக்கர் பசும்புல் நிலத்தை உழவுக்குட்படுத்தி உழவர்களுக்கு வேலை தரவேண்டுமென்பது அவர்களின் நோக்கமென்று குறிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி உழவர்களின் உணர்ச்சியையும், நாடு செல்லக் கூடிய போக்கினையும் காட்டுகின்றது. இந்தப் போக்கு இறுதியில் புரட்சியாக மாறவும் கூடும். புரட்சி தோன்றக்கூடாதென்பதற்காகவே திரு. பவே அவர்கள் தமதியக்கத்தைத் தொடங்கியுள்ளுள்ளார். புரட்சிக்கும் நிலக்கொடை இயக்கத்திற்கும் உள்ள வேறுபாடு வெறுப்புக்கும் அன்புக்கும் உள்ள வேறுபாடேயாகும்.

நிலக்கொடை இயக்கம் வெற்றி கொள்ளும்படி அன்பு முறையால் நிலச் சீர்திருத்தத்தைச் செய்து முடிப்பதுதான் இந்தியர்களுக்கு அதிலும் தமிழர்களுக்குச் சிறப்பு.

—மெய்கண்டான்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

மொழித் துறை

* ஈரடி இருநூறு *

நூலாசிரியர் — திரு. சே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

(முன் தொடர்ச்சி)

5. அதிகாரம்
இசை

அஃதாவது பா நலங்களுள் ஒன்றாகிய இசை கூறுதல். அதிகார முறைமையும் இதனால் விளங்கும்.

**1. இழுத்து மனத்தை
இசைப்பதிசை என்ப
அழுக்ககன் றொன்றுமாறு.**

அழுக்கு நீங்கி ஒன்றாகும்படி நினைவை இழுத்துப் பேருணர்வில் இசைவிப்பதை 'இசை' என்று சொல்லுவர்.

மனத்தின் நிகழ்ச்சியாகிய நினைவு 'மனம்' எனப்பட்டது. இசைப்பதெனத் தன் வினையாற் கூறினார், ஆற்றல் தோன்ற; மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் சார்பில் நினைவு அழுந்துதலின், 'இழுத்' தென்றும், அழுக்குறுதலின் அஃதகன் றென்றும், அகலினன்றி ஒன்றுதலின்மையின் 'அகன்றொன்றுமா' றென்றுங் கூறினார். பேருணர்வென்பது அவாய் நிலையான் வந்தது.

இதனால் இசை என்னும் பெயர்க்குக் காரணம் கூறப்பட்டது.

**2. உள்ளம் புகுந்தும் உயிர்
புகுந்தும் ஊடுருவும்
கள்ளப் புலன்கொள் இசை.**

செவிப்புலன் ஏற்ற கள்ளத் தன்மையுடைய இசை, மனத்துட் புகுந்தும் அதனைக்கடந்து உயிரறிவிற் புகுந்தும் அதனையுங் கடந்து அருளுணர்விற் செல்லும்.

கள்ள இசை என இயையும்; நுணுகி மிக மறைவாகிய அகநிலைகளினுஞ் செல்லுதலால் அவ்வாற்றல் தோன்ற இவ்வாறு கூறினார். உம்மைகள், சிறப்பு. ஊடுருவும் என்றது உயிருள் உறையும் அருளுணர்விற் செல்லுதலை.

**3. ஊனை வளைத்தும் உயிரைப்
பிணிக்கும் வல்
தானை உடைத்தாம் இசை.**

உடம்பைத் தன் வயப்படுத்திய பின்னும் உயிரையுங் கைக்கொள்ளும் படையினை உடையது இசை.

ஊனை வளைத்தலாவது அதனை நெகிழச் செய்தல் எனவும் உயிரைப் பிணித்தலாவது அதன் உணர்வைத் தன்கண் நிறுத்துதல் எனவுங் கொள்க. உம்மை முன்போற் சிறப்பு. உயிரையும் என்னும் எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. இசைக்குத் தானை என்றது, இசையுருக்கள் இசைப்பாட்டுகள் முதலியவற்றை. ஆம், அசை நிலை; இசையின் பெருமிதம் தோன்ற நின்றது.

**4. சென்றே மனந்தேய
நின்றே உயிருருக்க
என்றே பயின்ற திசை?**

மனம் தன் வயத்தில் இயங்கித் தேய்ந்து கெடத் தான் நிலை பெற்று நின்று உயிரை உருக்குதற்கு இசை எப்போது பயிற்சி பெற்றது?

“சென்று சென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாய” மனம் இயங்கியமைந் தென்றற்குச் 'சென்றே மனந்தேய' எனவும், மனத்தை ஈர்த்துத் தன்கண் இயங்க வைத்து முடிவில் தோன்றாமை யாக்குதற்கும் உயிரை நெகிழ்ச்சி செய்தற்கும் 'என்றோ பயின்ற' தெனவுங் கூறினார். ஏகாரங்களும் ஓகாரமும் அசை நிலை.

இதனால், நினைவையும் உணர்வையும் இசை தன்வய மாக்கும் என்பது பெறப்பட்டது.

**5. மீண்டும் ஒலிக்கும்
மெலிவிக்கும் உட்புகுந்து
ஆண்டடிமை கொள்ளும் இசை**

இசைத்தல் நின்ற பின்னும் நினைவினுள் நின்று இசை மீண்டும் ஒலிக்கும்; உடம்பையும் உள்ளத்தையும் நெகிழ்ச்சியால் மெலிவிக்கும்; உயிருட் புகுந்து அதனை ஆளும் நிலை பெற்று அடிமை கொள்ளும்.

ஒலித்தல் போல்வது, ஒலிக்குமெனப்பட்டது; ஈடுபாட்டின் மிகுதியினால், சென்றதை உன்னுதலின்; இசையினால் உடம்பு முதலியன மெலிதல், “ஏழிசைச் சூழல் புக்கோ இறைவா நின்தட

வரைத்தோட்கு என்கொலாம் புகுந் தெய்தியதே” என்பதனானும் பெறப்படும்.

இவை நான்கு பாட்டானும் இசையின் திறம் நுவலப்பட்டது.

6. மெய்ம்மறக்கும் விம்மும்
மிதக்கும் விதிர்விதிர்க்கும்
நையும் இசையுண்டு
நெஞ்சு.

நெஞ்சம் இசையை நுகர்ந்து தன்னை மறக்கும்; தேம்பி ஏங்கும்; அந் நினைவு வெள்ளத்தில் மிதக்கும்; ஈடுபாட்டின் மிகுதியினால் நடுநடுங்கும்; உருகும்.

மெய்ம்மறக்கும் என்றதற்கு, நெஞ்சு, தான் பொருந்தியுள்ள உடம்பை மறக்கும் எனப் பொருள் கூறிப் புலன்களை மறக்குமென்பது அதன் கருத்தெனக் கொள்ளலுமாம். நெஞ்சென்றது ஈண்டு மனத்தை.

இதனால், ஈடுபாட்டின்கண் மனம் எய்தும் பல்வகை வேறுபாடுகள் பெறப்பட்டன.

7. இசைதரும் இன்சுவைக்கும்
ஈடுளதோ? யாண்டும்
கனிச்சுவை காய்தருத லில்.

பழத்தின் சுவையைக் காய் தருதல் எங்கும் இல்லை; அது போல, இசை வழங்கும் இனிய சுவைக்கும் ஈடு வேறுண்டோ?

இசை வழங்கும் இன்பம் வேறெதனாலும் எய்தாதென்றபடி. இஃது எடுத்துக் காட்டுவமை. ‘காய் தருதல் இல்’ என்னுங் குறிப்பால், இசையின்பமே இன்பத்திற் சிறந்ததென்பது பெறப்படும்.

இதனால் இசைக்கலையின்பத்தின் தலைமை உணர்த்தப்பட்டது.

8. துன்பம் மறக்கத் துகள்
பறக்கத் தூய நல்
இன்பமே வீசும் இசை.

துன்பத்தை மறக்கவும் அதற்குக் காரணமான குற்றங்கள் விரைந்து நீங்கவும் தூய உயர்ந்த இன்பத்தையே இசை மனத்திற்கு வீசும்.

இன்பம் வீசுதலால் துகள் நீங்கித் துன்பம் மறக்கப்படுமென்று கூறினார். இசையினால் தீயோர் நல்லவராவதொன்றற்குத் ‘துகள் பறக்க’ எனவும், துன்பக் காலத்தில் அது நீங்கி ஆறுதலுண்டாதலின் ‘துன்பம் மறக்க’ எனவும் விதந்தார். இசையினால் மனம், புலன் மறத்தலாலும் நுணுகி உயர்தலாலும் ‘தூய நல் இன்பம்’ எனப்பட்டது.

9. பாலையும் பண்படுஉம்
பட்ட மரம் தழைக்கும்
சால இசையுட் புகின்.

இசையின்கண் மிகவும் ஈடுபட்டால், பாலை நிலமும் பண்பட்டு வளமடையும்; பட்டுப் போன மரமும் தளிர்க்கும்.

உயிரே இல்லாதனவும் உயிர் மாய்ந்த ஓரறிவு உடம்புங் கூட இசை நலத்தால் வளம் பெறும் இயைபு கூறப்பட்டது. அதனருமை நோக்கிச் ‘சாலப் புகின்’ என்றார். உயிரணுக்களும் உயிரில்லா அணுக்களும் இசையினால் இயங்கிக் கருதிய உருவுந் தழைவும் பயக்கும் என்றபடி.

இவை இரண்டு பாட்டானும் இசையின் பயன் கூறினார்.

10 வானுதவ வந்ததோ?
வாழ்க்கைப் பெருநலமோ?
தேனொழுகுந் தெய்வ இசை.

இனிமை பெருகுந் தெய்வத் தன்மை மிக்க இசை, வானுலகு வழங்கத் தோன்றியதோ? அன்றி இவ்வுலகத்தின் வாழ்க்கைப் பெரு நலந்தானோ, யாதென்பேம்?

செல்வி

(அத்தியாயம் 6ன் தொடர்ச்சி)

நாய்க்காலின் சிறு விரல்கள் ஒன்றுக்கொன்று இடைவெளியின்றி ஒன்றாகவே அமைந்திருக்கும். அது போல் ஒருவரும் மற்றவரும் நெருங்கிய தொடர்பு உடையவர்களாகவே பக்கத்திலேயே இருப்பர். ஆனால் அந்த ஒருவருக்கு பற்றவர் உதவமாட்டார். பெரிய பெரிய பொருள்கள் அல்ல. சிறிய சிறிய பொருள்கள் கூட உதவமாட்டார். அப்படியென்றால் ஒன்றுமே உதவமாட்டாரா? அல்லது ஓரளவாகிலும் உதவுவாரா? எதுவும் இல்லை. ஈக்காலின் அளவு கூட உதவமாட்டார். ஈ மிகச் சிறிய பூச்சி; அதன்கால் அதைவிடச் சிறியது. அந்த அளவு கூட அவர் உதவமாட்டார், இப்படிப்பட்ட நட்பா வேண்டும்? வேண்டாம். பின்பு எப்படிப்பட்ட நட்பு வேண்டும்? மிக்க தூரமுள்ளவராக ஒருவர் இருந்தாலுங் கூடப் பாவாயில்லை. ஆனால் அவர்கள் நட்பு பயன் தரக்கூடியதாக இருக்கவேண்டும்.

நாய்க்கால் சிறுவிரல்போல்
நண்கணிய ராயினும்,
ஈக்கால் துணையும்
உதவார் நட்பென்னும்?
சேய்த்தானும் சென்று
கொளல்வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கா லனையர் தொடர்பு.

இது, வியப்பின்கண் வந்தது. மறுமைக்கும் இம்மைக்கும் நலம் பயத்தலின், இவ்வாறு கூறினார். ஓகாரங்கள் மிகுதி உணர்த்தலின் சிறப்பென்க.

இதனால் இசையின் மாட்சி பெறப்பட்டது.

என்ன அருமையான பாடல்! அக்காலத்துப் பெரியோர்கள் அரும்பாடு பட்டுத் தேடித் தந்து வைத்து விட்டுச் சென்ற சிறந்த செல்வமல்லவோ இது! இவ்வருமையான கருத்துக்களைச் சாதாரண உலக நடையிலே பழகி வாழ்வார் எளிதிலே அறிந்து கொள்ள முடியுமா? முடியாது. இதுபோன்ற பல சிறந்த அரிய பெரிய உண்மை வாய்ந்த கருத்துக்களைக் கற்றவன, செம்மைப் படாமலிருப்பானா? ஒரு வேளை வினை முந்தி அவன் மதியைக் கெடுத்தாலும் கெடுக்கும். ஆனால் அவ்வினை ஒழிந்த பின்பேனும் அவன் அறிவினால் மிக மேன்மையடையான் எனக் கூற இயலுமா? இயலாது. இவ்வாறு அவன் கற்றதனால் அவன் பல இடங்கள் சென்று வாழ முடியும். கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பல்லவா!

'சின்ன தம்பி! இப்பொழுது கலங்கிக்கொண்டிருப்பதில் யாதும் பயனில்லை. இப்பொழுது நான் இரயிலடிக்குச் சென்று அண்ணனைப் பார்க்க வேண்டும். அவர்கள் என்னை எதிர்பார்த்த வண்ணமாகவே இருப்பார்கள்' என்றார் தினகரன்.

மாமா தாங்கள் மட்டும் இந்நிலையில் ஊருக்குச் செல்வதா! நானும் வருகிறேன். இருவருமே காரில் சென்று விடலாம் என்றான் சின்னதம்பி.

அப்படியென்றால் நானும் வருகிறேன். மூவருமாகவே காரில் போகலாம் என்றாள் சுசிலா. பின்பு காரில் ஏறினர். கார் ஓட ஆரம்பித்தது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

குருகுலச் செய்தி

குருகுலத் தொண்டர் குழுக் கூட்டம்

30-9-53 அன்று குருகுலப் பொதுக் கூட்டத்தில் முடிவு செய்தபடி 6-9-53 அன்று காலை குருகுலத் தொண்டர் குழுக் கூட்டம் கூட்டப் பெற்றது.

காலை 10 மணிக்குக் கடவுள் வணக்கத்துக்குப் பின் தொண்டர்களை வரவேற்றுப் பாராட்டிக் குருகுலச் செய்தியாளர் ந. ரா. ஆடலரசு பேசினார். ஆசிரியர், குருகுலத்தின் பல்வேறு தொண்டுகளைப் பற்றி விளக்கிச் சொல்லி, வாழ்க்கை மலர்ச்சிக்குத் தொண்டு ஒன்றே சிறந்த வழி என்று அறிவுறுத்தினார். குருகுலத்தின் இப்போதைய நிலைக்கேற்ப அதன் பல்வேறு பணிகளையும் கீழ்க்கண்டபடி பல தொண்டர்கள் முன்வந்து பொறுப்பாகச் செய்வதாக ஒப்புக் கொண்டனர்.

1. பாடசாலை:

திரு. V. D. கந்தசாமி
,, K. N. பலராமன்
,, கனகசபை
,, மாணிக்கவாசகம்

2. உணவு விடுதி:

திரு. கோவிந்தசாமி முதலியார்
,, பொ. த. முனிசாமி
,, சீனிவாசன்
,, டி. எஸ். கடிகாசலம்
,, செ. வ. பார்த்தசாரதி

3. அலுவலகங்களில் காரியம்:

திரு. ப. வேதாசலம்
,, P. V. குப்புசாமி

4. அஞ்சல்:

திரு. ந. ரா. ஆடலரசு
,, ந. இராமலிங்கம்
,, R. நடராசன்
,, S. நடராசன்
,, சை. வ. பார்த்தசாரதி
,, நாயர் வேங்கடேசன்
,, ஆ. சின்னப்பன்

5. செய்தித்தாள்கள், விளம்பரம்:

திரு. P. V. குப்புசாமி
,, N. சண்முகம்
,, செ. வ. பார்த்தசாரதி
,, S. நடராசன்
,, R. நடராசன்

5. பயிர்ப் பண்ணை:

திரு. ம. அண்ணாமலை
,, சீனிவாசன்
,, V. D. கந்தசாமி
,, பி. ச. சம்பந்தம்

7. பாற் பண்ணை:

திரு. P. V. குப்புசாமி
,, நாயர் வேங்கடேசன்
,, நாகம்மாள்
,, ஜீவரத்தினம்மாள்

8. அச்சகம்:

திரு. ப. வேதாசலம்
,, ந. ரா. ஆடலரசு
,, குமாரகுருபர முதலியார்
,, புருஷோத்தமன்

,, திருநாவுக்கரசு
,, கனகசபாபதி

9. சிற்றூர்ப் பணி:

திரு. கிருஷ்ணமூர்த்தி (அம்பத்தூர்)
,, சோமசுந்தரம்
,, G. சாரங்கபாணி

10. குருகுலச் செப்பனீடு (மராமத்து)

திரு. க. மா. தங்கவேல் முதலியார்
,, அங்கமுத்து
,, நாயர் வேங்கடேசன்

11. காணிக்கைக் கண்காணிப்பு:

சூளை:— திரு. சிவராஜ்
புரசை:— ,, தியாகராசன்
வண்ணை:— ,, ஜெகதீசன்
,, ஏகாம்பரம்
இராயபுரம்.— ,, பெருமாள்
பெரம்பூர்:— ,, ரா. சண்முகம்
சைதை.— ,, த. ஆறுமுகம்
திருவல்லிக்கேணி: சுப்பிரமணியம்
,, ,, ம. அண்ணாமலை
சிந்தாதிரிப்பேட்டை கணேசமூர்த்தி
பெரியமெட்டு, பூங்கா நகர்:—
,, ஆ. சின்னப்பன்
கிழக்கு சிதம்பர நகர்:—
,, சோமசுந்தரம்
,, நாயர் வேங்கடேசன்
,, பூ. நாகேசுரன்
மேற்கு சிதம்பர நகர்
,, ஜி. சாரங்கபாணி
,, கேசவ பிள்ளை
மண்ணடி:— ,, அங்கமுத்து

12. குருகுலத்தார் சேர்க்கை:

திரு. ப. வேதாசலம்.
,, பரமசிவம்
,, தியாகராசன்
,, சிவராஜ்
,, K. A. சீனிவாசன்

13. அதிகாரப் பணியாளர் சேர்க்கை:

திரு. பி. வி. குப்புசாமி
,, ப. வேதாசலம்
,, முனிசாமி
,, ந. ரா. ஆடலரசு

14. முல்லைக் கொடி எழுத்துத் தொண்டு:

திரு. ந. ரா. ஆடலரசு
,, புலவர் முருகவேள்
,, முத்துசாமி
,, ம. பெ. கண்ணபிரான்
,, மெய்கண்டார்
,, மோகனரங்கம்
,, சோமசுந்தரம்

15. முல்லைக்கொடி வளர்ச்சி:

திரு. மன்னார் செட்டியார்
,, பரமசிவம்
,, பி. வி. குப்புசாமி
,, K. A. சீனிவாசன்
,, பூ. நாகேசுரன்

16. நூல் விற்பனை:

திரு. ஆறுமுகம்
,, R. நடேசன்
,, மோகனரங்கன்
,, ந. இராமலிங்கம்

17. பேட்டைச் சொற்பொழிவுகள்:

திரு. ந. ரா. ஆடலரசு
,, ராமலிங்கம்
,, R. நடராசன்
,, V. D. கந்தசாமி

18. தொண்டர்படைச் சேர்க்கை, பார்வை:

திரு. தியாகராசன்
,, பரமசிவம்
,, R. நடேசன்
,, ஜி சாரங்கபாணி
,, டி. எஸ். கடிகாசலம்
,, சி. க. கோவிந்தசாமி
,, க. பெருமாள் (இராயபுரம்)
,, பெருமாள்
,, பொ. க. முனிசாமி

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

இயக்கிப் பழக்கிப் பண்படுத்தி முன்னேற்றி நாட்டுக்கு நலம் விளைக்கவேண்டும் என்ற எண்ணமும் போக்கும் உடையது நம் குருகுலம். எனவே அதிற் சேர்ந்துள்ளவர்கள் தத்தம் நிலைக்கேற்றபடி பணியாற்ற முன்வர வேண்டும். பணித் திட்டத்தைப் பல்காலும் படித்துப் பலதுறையிலும் செயலாற்ற வேண்டும் என்று நினைப்பூட்ட விழைகின்றேன்.

—ந. ரா. ஆடலரசு.

19. சென்னையில் குருகுல அலுவல்கள்:

திரு மோகனரங்கம்
,, N. சண்முகம்
,, ப. வேதாசலம்
,, விசுவநாதம்
,, எதிராஜலு

20. தொழிற் பண்ணை:

திரு. க. மா. தங்கவேல்
,, மன்னார் செட்டியார்
,, R. நடேசன்
,, அங்கமுத்து
,, தம்பையா

21. பொருளாதார வளர்ச்சிக்குழு:

திரு பி. வி. குப்புசாமி
,, ப. வேதாசலம்
,, வேதாசல செட்டியார்
,, ஜி. சாரங்கபாணி
,, ச. த. முனிசாமி
,, மன்னார் செட்டியார்
,, க. உலகநாதன்

22. பணி மேற்பார்வை, தூண்டுதல்:

திரு. ப. வேதாசலம்
,, த. ஆறுமுகம்
,, ந. ரா. ஆடலரசு
,, பரமசிவம்

கூட்டம் 12-45 மணிக்குக் கடவுள் வாழ்த்தோடு இனிது முடிந்தது.

நமக்குள்ள பொறுப்புகள்

குருகுலத்தார்க்கு நினைவூட்டல்

சென்னைப் பகுதியில் உள்ளவர்களாகிய நாம் குருகுலத்தில் நூற்றுக்கணக்கில் சேர்ந்திருக்கின்றோம். வெளியூர்களிலும் அங்கங்கே சிலர் சேர்ந்திருக்கிறார்கள். ஆனாலும், ஆசிரியரோடு நெருக்கமாகப் பழகத்தக்க பேறு சென்னையன்பர்களாகிய நமக்கே வாய்த்திருக்கிறது. எனவே ஆசிரியரவர்களின் சொற்பொழிவுகளைப் பெரும்பாலும் தவறாது கேட்கின்றோம். அவர்களை அவ்வப்போது வணங்கித் திருநீறு பெறுகிறோம். முல்லைக் கொடியைக் கிழமைதோறும் பெற்று மகிழ்கின்றோம்.

இனி, "இந் நலங்களுக்காகத்தான் நாம் குருகுலத்தில் சேர்ந்தோமா? அப்படியானால் இவைகளைக் குருகுலத்தில் சேராமலே கூடப் பெறலாமே! இவைகளுக்கு மேலும் நாம் குருகுலத்தில் பெறவேண்டிய நலங்கள் இருக்கின்றனவா?" என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந் நலங்கள், ஈடுபட்டுள்ள நமக்கும் பிறர்க்கும் எளிதாகக் கிடைக்கின்றன. ஆனால், நம் நோக்கம் இவைகளாகவே இருந்துவிடக்கூடாது. ஆசிரியர் வழியில் குருகுலத்தின் கொள்கைகளில் நிலைத்துப் பணி செய்து பண்படுதலே நம் நோக்கமாக இருக்க வேண்டும். அதற்காகவே நாம் குருகுலத்தில் சேர்ந்தோம்.

குருகுல மாணவர்களில் இயன்றவர்கள் மாம்பாக்கத்தில் நடைபெற்றுவரும் செயல் வகைகளில் தக்கபடி ஈடுபட்டுக் குருகுலத்தை நடத்தும் பொறுப்பையே மேற்கொள்ளலாம். மற்றவர்கள் தொண்டர்படையில் சேர்ந்து அவர்களுக்கு உதவுவதோடு குருகுலத்தின் கொள்கை, பணி முதலியவைகளை எங்கும் பரப்பிவரலாம். அதுவும் இலாதவர்கள் தாம் தாம் உள்ள இடங்களிலேயே தனித்தும், தக்கவர்களோடு சேர்ந்தும், பணித்திட்டத்தில் கண்ட பன்னிரு வகைப் பணிகளில் இயன்றதை விருப்பமானதை ஏற்றுச் செய்து நாட்டில் நல்லுணர்ச்சிகளையும் திருத்தங்களையும் பெருக்கிவர வேண்டும். குருகுலத்தார், சும்மாயிருக்கக்கூடாது. ஏதேனும் ஒரு பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது கருத்து.

நம்முடைய நாட்டையே அதன் பண்டைப் பெருநிலையில் இக் காலத்துக்கு ஏற்றபடி எல்லாத் துறைகளிலும் வைக்க வேண்டிய பெரும் பொறுப்பு நம்மைச் சார்ந்திருக்கிறது; குருகுலம் அந் நோக்குடையதாகலின்.

மொழித்துறையில், தமிழ், அதன் வழி நாட்டு எல்லை, அரசியல், கல்வி முதலியனவும்; கலைத் துறையில், நம் நாட்டுப் பழைய மருத்துவம், கணிதம், இசை, நடனம், புதிய மேலை நாட்டு விஞ்ஞானம் முதலியனவும்; தொழில் துறையில், பல்வகைக் கைத் தொழில்கள், பொறித் தொழில்கள் முதலியனவும்; அருட்டுறையில், சமயத் தெளிவு, சீர்திருத்தங்களும்; பணித்துறையில், மன்பதைப் பணி, இன ஒற்றுமை, சிற்றுயிர்ப் பணி முதலியனவும் என எத்தனையோ இருக்கின்றன.

அவ்வத் துறையிலும் கருத்து வைத்து, உலகியல் அருளியலாகிய இரு நோக்கும் கொண்டு, நடுநிலை பிறழாமல் நின்று, எல்லாரையும் தழுவிச் சான்றாண்மை முறையில் உண்மைகளை எடுத்துச் சொல்லி, உள்ள குழப்பங்களைத் தெளிவுபடுத்தி, முன்னேற்றத்தை உண்டாக்கிப் பரப்பி வருதல் வேண்டும்.

அரசியல் இக் காலத்தில் முதன்மை பெற்றிருக்கிறது. அதில் எத்தனையோ குழப்பங்கள், கட்சிப் பிணக்குகள்! மக்களுக்கு நம் நாட்டு மொழி சமயப் பண்புகளை ஓம்ப எந்தக் கட்சியைப் பின்பற்றுவது என்று தெரியவில்லை. எனவே தக்க முறையில் கட்சிகளைப் பற்றி விளக்கம் தந்து, விருப்பு வெறுப்புகளை வளர்க்காமல் உண்மை நலங்களை ஓம்பும் துறைகள் வளருமாறு செய்தல் வேண்டும்.

அதிகார ஏற்பு மாணவர்களைக் கொண்டு 'குருகுல ஆட்சி மன்றம்' ஒன்றை நிறுவி நம் நாட்டுக்கு அரசியல் எப்படி இருக்க வேண்டும் என்று, திருவள்ளுவர் நெறியில் நடத்திக் காட்டவேண்டும். பணியை மேற்கொள்ளுகிறவர்கள் குருகுல ஆட்சி மன்றத்தில் இடம் பெறுதல் போல, நாட்டு நலன் கருதி மொழி, கலை, தொழில், அருள், பணி என்னும் ஐவகை வாழ்க்கைத் துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் மேற்கொண்டு நடத்திவரும் பண்புடையவர்களே நாட்டு ஆட்சியில் இடம்பெற

வேண்டும் என்கிற உணர்வையே மக்கள் பால் உண்டாக்கிவிட வேண்டும்.

சமயத்துக்கு இன்று எத்தனையோ எதிர்ப்பு; அத்துறையில் உள்ள குறைகளே அவற்றிற்குக் காரணம். இரண்டையும் நீக்கி மெய்ச் சமய வளர்ச்சிக்கு வழி செய்யவேண்டும்.

இயற்கைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றது மொழி வழி நாடுகளைப் பிரித்து அவ்வந் நாட்டுத் தாய் மொழியிலேயே எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறுமாறு செய்தல். அதை இந் நாட்டுத் தலைவர்களிற் பலர் இன்னும் சரிவர உணரவில்லை. வீண் அச்சம் ஐயம் கொண்டு இந் நல்லேற்பாட்டைக் காலங் கடத்தி நாட்டில் மிகுந்த குழப்பத்தையும் எதிர்ப்புணர்ச்சிகளையும் பெருக்கி வருகின்றனர். இந் நிலைகளை மாற்ற வேண்டும்.

இன்னும், நம் நாட்டு மருத்துவம் இயற்கையானது; எளிய செலவில் இயல்வது. அதை வளர்க்க வேண்டும் என்கிற கருத்து அரசியலாரிடமோ நாட்டு மக்களிடமோ, என் நாட்டுமருத்துவர்களிடமோ கூட இல்லை. அதனை எழுப்பவேண்டும்.

இப்படி எவ்வளவோ எழுதிக் கொண்டே போகலாம். "கடன் என்ப நல்லவை எல்லாம்" என்றார் திருவள்ளுவர்.

சுருங்கச் சொன்னால், முன்னோர் நெறிக்கும், பின்னோர் சீர்திருத்த நோக்குக்கும் மாறில்லாதபடி எல்லாரும் ஒப்புக் கொள்ளத் தக்க காரண காரியங்களைக் காட்டி இணைத்து ஒரு புதிய உலகத்தையே உருவாக்கவேண்டும் என்னும் பெரு நோக்கத்தோடு, குருகுல முறையில வாழ்க்கை மறையாகிய இருக்குறளை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப்பட்டது நம் பதி குருகுலம்! அதை ஏதோ ஒரு சிறிய அமைப்பாக, பிள்ளைகள் சிலர் படிக்க, பழகத் தோற்றுவிக்கப்பட்டதாக மட்டும் எண்ணிவிடக் கூடாது. அவை எல்லாம் சிறு பணிகள் குருகுலத்தின் பெரு நோக்குக்கு!

பெரியவர்களை, வாழ்க்கையில் ஈடுபட்டுப் பல துறைகளில் நிலைகளில் இருப்பவர்களை ஈர்த்து

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியாயம் 1.

உன் அம்மாவும் இறந்தாள். நானும் இப்பவோ பின்னும் சிறிது நேரமோ என்று கிடக்கிறேன், உன்னை நினைத்தால்தான் மிக்க கவலையாக இருக்கிறது என்று கூறி நடந்துகொண்டே கண்ணீர் வடித்தார் கந்தசாமி முதலி.

தூக்கம் கூற முடியவில்லை செல்விக்கு. செல்விக்கு, இன்னும் பட்டணம் போக எத்தனை மைலப்பா? என்று வினவினாள்.

ஏறக்குறைய இன்னும் 40 மைல் இருக்குது செல்வி! மாலை நேரமாகிவிட்டது இன்னும் கொஞ்சதூரம் சென்றால் எங்கேயாகிலும் ஒரு வீட்டில் தங்கி விடியற்காலையில் கிளம்பிப்போகலாம் என்றார் கந்தசாமி முதலி.

அப்பா என்னால் நடக்கக்கூட முடியவில்லை கால் வலி அதிகமாகிறது பசியோ காதை அடைக்கிறது. என்றாள் செல்வி.

கவலைப்படாதே அம்மா, கடவுள் நம்மைக் காப்பார் என்று கூறினார்.

எங்கோ ஒரு கார் வெகு வேகமாக ஓடிவந்தது அப்பா கார் வருகிறது ஒதுங்கிப் போகலாம் என, கையைப் பிடித்து இழுத்தாள். அச் சமயத்தில் கால் சுளுக்கிக் கொண்டது. காலை எடுத்து வைக்க முடியவில்லையே என்றார். அப்பா கார் என்ற வீரலுடன் ஒதுங்கி ஓடினாள். வேகமாக வந்த கார் அவர் காலின் மேல் ஏறியது. விழுந்தார், உயிர் சென்றது கூற்றுவனிடம். ஓ, வெனக் கதறினாள். யாது செய்வாள்? அழுதாள்; கார் வேகமாகஓடியே சென்றுவிட்டது. பக்கத்தில் ஒருவருமே இல்லை. அழுதாள். தந்தையைத்தனியாக விட்டு நடக்கலானாள், தன் கால் சென்றவழியே.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)